# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர் மன்றத்தின் 23–04–2018–ம் திங்கள் கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### பொருள் எண்.1

தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றிய அறிவிக்கை

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82–ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A ˆபடி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் –2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)க்கு கீழ்க்கண்டவாறு சட்டத்திதிருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920.

5.In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub-section (1)

(1) for clause (c) the following clause shall be substituted, namely:-

“(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and failen women and such similar institutions run pursely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax”.

(2) in the provision, for the Expression “clauses (a), (c) and (e)”, the expression “clauses (a) and (e)” shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக குழித்துறை நகராட்சி சிறப்பு அதிகாரி/ மன்றத் தீர்மானம் எண்.3081, நாள் 23–04–2018

1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும்.

2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரிவிதிக்கவும்.

3) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.

4) கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.

5) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்து வரிவிதிக்கவும்.

6) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78 (3)–ன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)ன்படி, மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின், அதனை, குறிப்பிட்ட நாட்களுக்குள், எழுத்து மூலமாக ஆணையர், குழித்துறை நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.
ந.க.எண்.793/2018/அ1.

**நகர்மன்றத் தீர்மான எண்.3081**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்குரிய 2018–2019–ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3082**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 28–03–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 3 கழுவன்திட்டை ஆர்.சி.தெருவில் 4”PVC குழாய், இடைத்தெரு அங்காளம்மன்கோவில் தெரு முதல் மீன்மார்க்கெட் வரை 4”PVC பைப் பதித்தல் மற்றும் சாலை பேவர் பிளாக் Relaying செய்தல் | 1.90 | 1) பி. ஜெயச்சந்திரன்<br>2) பி. ஜெயப்பிரகாஷ் | 0.90% அதிகம்<br>0.24% குறைவு |
| 2 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கணினிகள் மற்றும் பிரின்டர்கள் வருடாந்திர பராமரிப்பு செய்தல் | 0.75 | 1) J.C. Computers, Kuzhithurai<br>2) Akshaya Computer Kuzhithurai | 0.70% குறைவு<br>4.80% அதிகம் |
| 3 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஜெனரேட்டர்கள் வருடாந்திர பராமரிப்பு செய்தல் | 2.10 | 1) M/S. Annai Generators spare and Service, Nagercoil<br>2) M/S.R.J. Power Iyyar vilai, Nattalam | 0.28% அதிகம்<br>0.06% குறைவு |

<u>அ.கு.:</u>– வரிசை எண்.1, 2, 3 ஆகியவற்றில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3083**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 17–ல் அட்டைக்குளம் சாலையில் வடிகால் ஒடை மிகவும் குறுகலாக உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் சாலைகளுக்கு சென்று குடியிருப்புகளுக்கு புகுந்து விடுகிறது. இதனால் அப்பகுதி மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய் பரவும் நிலையிலுள்ளது. எனவே மேற்படி சாலையில் மழைநீர் வடிகால் ஒடை அமைத்து மூடுசிலாப் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.7,50,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3084**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி வார்டு 15 தேவன்விளையில் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு Geological Survey report–ன்படி மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட ஆழத்தைவிட கூடுதல் ஆழம் Bore Drilling செய்தால் தான் தண்ணீர் கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி இடத்தில் தற்போது 390 அடிக்கு (117m) ஆழ்துளை கிணறு அமைப்பதற்கும் குடிநீர் அவசியம் கருதி மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக செலவாகும் தொகைக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ளவும் கூடுதலான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3085**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 14–ல் துரும்பல்விளை சாலை முதல் Railway track வரை செல்லும் சாலை ஒகி புயலால் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. பொது மக்கள் மற்றும் போக்குவரத்து நலன்கருதி மேற்படி சாலையில் பேவர் பிளாக் பதிக்க ரூ.7,50,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3086**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 10 பழவார் சி.எஸ்.ஐ. சர்ச் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி சாலையில் பேவர்பிளாக் அமைப்பதற்கு ரூ.4,80,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியின்கீழ் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3087**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 1–ல் படப்பறை முதல் வள்ளிக்கோடு குளம் செல்லும் சாலையில் வடிகால் ஓடை இல்லாமலுள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் சாலையில் தேங்கி சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி சாலையில் வடிகால் ஓடை அமைத்து சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.9,80,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3088**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 1–ல் வள்ளிக்கோட்டு குளம் முதல் படப்பறைகுளம் செல்லும் சாலை குண்டு குழியுமாக மிகவும் மோசமடைந்துள்ளது. மேற்படி சாலையின் ஒருபகுதி மட்டும் பொதுமக்கள் நலன் கருதி சிமெண்டுதளம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.9,90,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3089**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 2–ல் நெடும்போக்கி கோயில் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து, பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாலும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதாலும் பொது மக்கள் நலன்கருதி மேற்படி சாலையில் பேவர்பிளாக் பதிக்க மதிப்பீடு ரூ.5,50,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3090**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பூங்காவில் 14–வது மத்திய நிதிக்குழு மானியத்தின்கீழ் (2017–2018) தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பூங்காவில் கூடுதல் பணிகள் Sitting Bench with Shed அமைப்பதற்கும், Front Gate, அமைப்பதற்கும், Electrical arrangement, Plumbing arrangement, Painting, Mexican Lawn with Border plant போன்ற பணிகள் மேற்கொள்ளவும், வாவுபலி பொருட்காட்சி சம்பந்தமான வரலாறு எழுதுவதற்கும், முக்கியமான சுற்றுலா தலங்களுக்கான படங்கள் Artist மூலம் வரைவதற்கும் மதிப்பீடு ரூ.9,50,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3091**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட குழித்துறை பகுதியில் வார்டு 8, 9 எம்.எஸ்.சாலை, கல்லுக்கெட்டி, பழைய எம்.எஸ். சாலை பகுதிகளில் உள்ள குடியிருப்புகளிலுள்ள குடிநீர் இணைப்புதாரர்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யும் குடிநீர் வினியோக குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் சுமார் 150 மீட்டர் நீளம் சிமெண்டு கான்கிரீட் சாலையில் புதிதாக 90mm PVC குழாய் புதிதாக பதிக்க ரூ.1,50,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை குடிநீர் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**நகர்மன்றத் தீர்மான எண்.3092**</u>
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 13</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களின் மின் அஞ்சல் படிவம் நாள் 2–4–2018–ன்படி NEM incessent rain fall 2017 (Temporary restoration

of Road work) நிதியின்கீழ் ரூ.4.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6–ல் இடக்குளம் சானல் கரைரோட்டில் தார் சாலை ஒட்டுபணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.4,80,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு திட்ட நிதி ரூ.4.51 இலட்சம் போக மீதம் தொகை ரூ.29000/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3093**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கழுவன்திட்டை பகுதியிலுள்ள நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் 6''AC பிரதான குழாயில் பாளையங்கெட்டி பூச்சிவிளை, குழிவிளை, ஞாறாம்விளை, காவடிவிளை ஆகிய இடங்களில் உடைவு ஏற்பட்டுள்ளது. தற்சமயம் நெடுஞ்சாலை துறையால் சாலைப்பணி நடைபெற இருப்பதால் குடிநீரின் அவசர அவசியம் கருதி மேற்படி குழாய் உடைவினை சரி செய்வதற்கும் விளவங்கோடு மேல்நிலை பள்ளியின் அருகே 90mm PVC Pipe line புதியதாக அமைப்பதற்கும் மதிப்பீடு ரூ.70,000/– தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3094**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனமான இருசக்கர வாகன காப்பகம் மற்றும் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் ஆகிய இரு இனங்கள் 2018–2019–ம் ஆண்டிற்கு குத்தகைக்கு போகாத காரணத்தினால் 1–4–2018 முதல் துறை மூலம் வசூல் செய்ய வேண்டியதுள்ளதால் பேருந்து நுழைவு கட்டணத்திற்கு டிக்கெட் 5000 மற்றும் இருசக்கர வாகனகாப்பகத்திற்கு டிக்கெட் 5000 எண்ணம் ஆகமொத்தம் 10,000 டிக்கெட் அவசரஅவசியம் கருதி அச்சிட்டு வழங்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி 31–3–2018 விலைப்புள்ளி கோரியதில் வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தர்ஷினி குளோபல் ஷாப் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | 10000 டிக்கெட் அச்சிட்டு வழங்க தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | பிந்து ஸ்டுடியோ மற்றும் அச்சகம், மார்த்தாண்டம் | 7500 |
| 2 | டைமண்ட் அச்சகம், மார்த்தாண்டம் | 8000 |
| 3 | தர்ஷினி குளோபல் ஷாப், மார்த்தாண்டம் | 6000 |

அ.கு. :– வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள தர்ஷினி குளோபல் ஷாப் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் அதற்கான தொகையை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3095**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் நடைபெறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி குழித்துறை நகராட்சி நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34இ நாள் 22–06–2000–ன்படி குழித்துறை நகராட்சிக்கு நிரந்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி 93–வது வாவுபலி பொருட்காட்சியினை 27–07–2018 முதல் 15–08–2018 வரை 20 தினங்கள் நடத்தவும் 11–8–2018 அன்று ஆடி அமாவாசை தினமாக கொண்டாடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1001/2018/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண்.3096**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்.17</u>

**<u>93– வது வாவுபலி பொருட்காட்சி 27–07–2018 முதல் 15–08–2018 முடியவுள்ள காலத்திற்கு பொது ஏல உரிமை இனங்கள் மற்றும் ஏல நிபந்தனைகள்</u>**

| வ. எண் | குத்தகை உரிம இனத்தின் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் வஙகி வரைவோலை | மின் இணைப்பிற்க்கான வைப்புத்தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமை | 30,00,000 | – |
| 2 | பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் | 6,00,000 | – |
| 3 | நகராட்சி குறிப்பிட்ட இடத்தில் கடை கட்டி ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை செய்ய | 2,50,000 | 25,000 |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி கூல் டிறிங்ஸ் விற்பனை செய்ய | 75,000 | 10,000 |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி உணவு விடுதி நடத்த | 1,00,000 | 10,000 |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி அப்பளம் பஜ்ஜி கடை நடத்த | 1,00,000 | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 7 | நகராட்சி கடையில் மட்டும் பாப்கான் விற்பனை செய்ய | 1,00,000 | 10,000 |
| 8 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பானி பூரி அமைத்து விற்பனை செய்ய | 1,00,000 | 5,000 |
| 9 | தபால் நிலையம் முன்புள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைக்க | 10,000 | 2,000 |
| 10 | **நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால்களில் உரிமங்களுக்குட்பட்ட பொருட்களை விற்பனை செய்ய கடை வாடகை** | | |
| 10 அ | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன் பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1–க்கு | 15,000 | 2,000 |
| 10(ஆ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1–க்கு | 10,000 | 2,000 |
| 10 (இ) | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால் 1 முதல் 20 வரை கடை 1–க்கு | 5,000 | 2,000 |
| 10(ஈ) | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கடைகள் 1 முதல் 30 வரை கடை 1–க்கு | 25,000 | 5,000 |

<u>மேற்கண்ட அனைத்து இனஙகளுக்கும் பொது நிபந்தனைகள்</u>

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருட்காட்சியை நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.3) துறை அரசு ஆணை எண்.34, நாள் 22–06–2000–ன்படி இப்பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்துபவதற்கு நிரந்தர அனுமதி குழித்துறை நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழஙகப்பட்டதின்படி 93–வது வாவுபலி பொருட்காட்சி 27–07–2018 முதல் 15–08–2018 முடிய நடத்துவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகள் பின் வருமாறு.

1) வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் விண்ணப்ப படிவம் ரூ.250/–ஐ செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

2) ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் Passport அளவிலான புகைப்படத்துடன் ஆதார் அடையாள அட்டை மற்றும் கைபேசி, தொலைபேசி எண் கொடுக்க வேண்டும்.

3) விண்ணபத்தில் புகைப்படம் ஒட்டப்பட்ட நபர் மட்டும் தான் ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும் எக்காரணம் கொண்டும் மாற்று நபர் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பெயரிலுள்ள வரி மற்றும் வரியில்லா இனஙகள் நிலுவை செலுத்தி ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் வரி பாக்கி இருந்தால் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது

4) வைப்புத் தொகை செலுத்த வேண்டிய இனங்களுக்கு வைப்புத் தொகை இனணத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட வேண்டும்.

5) ஏலத்தை முடிவு செய்ய மன்றம் அல்லது ஒப்பந்தக்குழுவிற்குத்தான் அதிகாரம் உண்டு. மன்றம் ஒப்புதல் அளித்த பின்புதான் உத்தரவு வழங்கப்படும். உத்தரவுப் பெற்றுக் கொண்ட இரண்டு தினஙகளுக்குள், இரண்டாவது மற்றும் அதை தொடர்ந்து வரும் மறுஏலஙகளுக்கு குத்தகை தொகையை 12.00 மணி நேரத்திற்குள் முழுத்தொகையையும் நகராட்சி கஜனாவில் செலுத்தப்பட வேண்டும். தவறினால் வைப்புத் தொகை பறிமுதல் செய்து விட்டு இரண்டாவது ஏலக்கேள்விதாரருக்கு ஏலம் உறுதி செய்து கொடுக்க நகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இருவரும் கட்டத்தவறினால் இருவருடைய வைப்புத்தொகைகளும் மறு அறிவிப்பின்றி பறிமுதல் செய்யப்படும். மேற்கொண்டு மறுஏலமோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளியோ வரவழைக்கப்பட்டாலும் இலாகா மூலம் நடத்தப்பட்டு முதலில் கேட்கப்பட்ட ஏலத்தொகை/ ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு குறைவு ஏற்பட்டால் முதல் ஏலத்தாரர்/ஒப்பந்தத்தாரரிடம் ஈடு செய்ய நகர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

6) ஏலத்தை/ ஒப்பந்தப்புள்ளியை ஒத்திவைக்கவோ அல்லது வேறு ஒருதேதிக்கு தள்ளி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

7) ஏலத்தை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நடத்தப்படும்.

8) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உத்தரவு வழங்கும்போது உத்தரவில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் ரூ.50/– மதிப்புள்ள அரசு முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் உரிமம் பெற்றவர் அவரது சொந்த செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும். தவறினால் உரிமம் வழங்கப்பட்ட இடத்தில் அன்னாரை பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

9) உரிமம் பெற்றவர் நகராட்சியின் முன் அனுமதியின்றி பொருட்காட்சி திடலுக்குள்ளும் வெளியிலும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை எந்த வகையிலும் நிலுவையிருந்தாலும் அதனை செலுத்திய பின்னர் தான் அவுட்பாஸ் (Out- Pass) வழஙகப்படும்.

10. நகராட்சியிடமோ, வேறு துறையினரிடமோ பெற வேண்டிய உரிமம் மற்றும் செலுத்த வேண்டிய உரிமம் கட்டணம் மற்றும் வரிகளை உரிமை பெற்றவர் தனது சொந்த செலவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

11. இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல், வெள்ளம், தீ, மழை, பந்த், மற்றும் இனக்கலவரம் போன்றவைகளால் ஏற்படும் இழப்புகளுக்கும் நஷ்டத்திற்கும் நகராட்சி பொறுப்பாகாது.

12. நகராட்சி அனுமதியுடன் பக்ககாட்சி அமைப்பாளர் தஙகள் சொந்த செலவில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டணத்தையும் மின்சார வாரியத்திற்கு செலுத்திட வேண்டும்.

13. ஒலிபெருக்கி மற்றும் வீடியோ மூலம் விளம்பரம் செய்பவர்களுக்கு நகராட்சியால் மின் இணைப்பு வழஙகப்படும். இதற்காக கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எக்காரணத்தைக் கொண்டும் விளம்பர போர்டுகள், பானர்கள், சுவரொட்டிகள் அமைக்க அனுமதி கிடையாது.

14. ரிக்கார்டு டான்ஸ், சூதாட்டம், திறமை விளையாட்டு மற்றும் அபாயகரமான பொது மக்களுக்கும் பொருட்காட்சிக்கும் தீஙகுவிளைவிக்கக் கூடிய எந்தவொரு இனஙகளையும் கண்டிப்பாக பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் அனுமதிக்கப்பட மாட்டாது. துறைகளால் தடை செய்யக்கூடிய நிகழ்ச்சிகள் பொருட்காட்சி அரசாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் பக்கக்காட்சி அமைக்கப்பட வேண்டும்.

15) கூடுதலாக பெறப்படும் ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்ற ஒப்புதல் பெற்று உரிமம் வழஙகப்படும்.

16) ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளித் (கூடுதலாக) தொகையை மன்ற ஒப்புதல் பெற்று அறிவிப்பு வழஙகிய மூன்று தினஙகளுக்குள் தொகையாக நகராட்சியில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

17) ஏலத்தொகையை அறிவிப்பு செய்யப்பட்ட 7 தினஙகளுக்குள் செலுத்தாதபட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பு மின்றி இரண்டாம் நபருக்கு உரிமம் வழஙக ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

18) ஏலம் கூடுதலாக எடுத்தவா் மூன்று தினத்திற்குள் ஏலத்தொகையை செலுத்தப்பட வேண்டும். தவறினால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

19) நகாட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ள ஏலப்பொறுப்புத் தொகை ஆணையர் குழித்துறை நகராட்சி பெயரில் வரைவோலையாக எடுத்து ஒப்படைத்த பின் ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும்.

20) ஒரே நபர் இரண்டு இனஙகளுக்கு மட்டும் தான் கலந்துக் கொள்ள இயலும்.

21) நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள இடஙகளில் மட்டும் தான் குத்தகைதாரர் உரிமம் நடத்தப்பட வேண்டும்.

22) கூல்ரிஙஸ், ஹோட்டல், பானிபூரி, அப்பளம், பஜ்ஜி கடை மற்றும் ஐஸ்கிரீம் நடத்தும் உரிமம்தாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் நகராட்சி வழஙகும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள கடைகளின் அளவில் மட்டுமே கடைகள் அமைக்கப்படவேண்டும். குறிப்பிட்ட அளவில் கடையினை தஙகளின் சொந்த செலவில் தீ பிடிக்காத கூரை அமைத்து கடை அமைக்கப்பட வேண்டும்.

23) பொருட்காட்சி திடல் உள் பகுதியிலும் வெளிப்பகுதியிலும் நகராட்சியால் அமைத்து கொடுக்கும் அனைத்து கடைகளுக்கும் 40W குழல் விளக்கு ஒன்று மட்டும் இலவசமாக பொருத்தப்படும். அதற்கு மேல் அதிகமாக நகராட்சி அனுமதி பெற்று அமைக்கப்படும் விளக்குகளுக்கு 40W ஒன்றிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/– வீதம் நகராட்சி பணியாளர்களால் மின் கட்டணம் வசூல் செய்யப்படும். நகராட்சி கடைகள் தவிர வெளிகடைகளுக்கு நகராட்சியின் மின்சாரம் எடுப்பதற்கு அனுமதி இல்லை. நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் மின் இணைப்பை குத்தகைதாரர் நகராட்சி அனுமதி பெற்று குத்தகைதாரரின் சொந்த செலவில் இவ்வலுவலக பணியாளர்கள் மேற்பார்வையில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒலி, ஒளி அமைப்பாளர் மின் விளக்குகளுக்கும் மின்சாரத்திற்கும், கடைகளில் பணம் வசூல் செய்ய அனுமதி இல்லை. ஒலி ஒளி நகராட்சி அனுமதியளிக்கும் இடத்தில் மட்டுமே அமைக்க வேண்டும்.

24) நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் தான் கட்டயமாக பக்கக் காட்சி அமைத்து நடத்தப்பட வேண்டும்.

25) பக்கக்காட்சி நடத்தும் இடத்தில் பொருள்சேதம், உயிர்சேதம் ஏற்பட்டால் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் இழப்பீடு வழஙக வேண்டும்.

26) பக்கக்காட்சி எடுக்கும் குத்தகைதாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் வரைபடத்தின்படி கபடி நடத்த 50'x50' அளவுகள் இடம் விட்டுதான் அனைத்து பக்கக்காட்சி இனஙகளும் அமைக்கப்பட வேண்டும்.

27) வி.எல்.சி. திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் கபடி போட்டி நடைபெறும் போதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரமும் பக்கக்காட்சி விளம்பரமும் கண்டிப்பாக செய்யக் கூடாது. கபடிப்போட்டிக்கான இடத்தில் பக்காட்சி அமைக்ககூடாது.

28) குத்தகை இனஙகளுக்கு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் வரிகள் பொருந்தும்.

29) ஏலத்திற்கான கட்டுப்பாடுகள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்களுக்கும் பொருந்தும்.

30) பறவைகள் அல்லது மிருகஙகள் மற்றும் சூதாட்டம், ரிக்கார்டு டான்ஸ் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் வைக்க கூடாது.

31) கட்சி சின்னஙகளே கொடிகளோ மதசமந்தமானவை குறித்த பிரச்சாரஙகளே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.

32) பக்கக்காட்சி உரிமைதாரர் எக்காரணம் கொண்டும் விற்பனைக்குட்பட்ட பொருட்களை விற்க கூடாது.

33) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் எந்தவொரு பக்கக்காட்சியோ, படகு போக்குவரத்தோ அமைக்க அனுமதி கிடையாது.

34) 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019–ம் ஆண்டிற்குரிய குத்தகை இனஙகளுக்குரிய பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்.

35) பக்கக்காட்சி அமைப்பவர் தீ தடுப்பு துறைச் சான்று மற்றும் பொதுப்பணித்துறையிடம் பக்கக்காட்சி பொருட்களுக்கான உறுதி சான்று (Stability Certificate) தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நகராட்சி பொறுப்பேற்காது.

36) பொருட்காட்சி திடலுக்குள் ஏலத்தில் விடப்பட்ட இனஙகளை தவிர வேறு வியாபாரம் செய்யக் கூடாது.

37) பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும்.

38 ) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஐஸ்கிரீம் விற்பனை செய்ய வேண்டும்.

39) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் கூல்டிரிங்ஸ் விற்பனை செய்ய வேண்டும்.

40) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் மட்டும் குறிப்பிட்ட அளவில் உணவு விடுதி அமைத்து விற்பனை செய்ய வேண்டும்.

41) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிட்ட அளவில் அப்பளம் பஜ்ஜி கடை அமைத்து நடத்த வேண்டும்.

42) நகராட்சி ஸ்டாலில் மட்டும் பாப்கான் விற்பனை செய்ய வேண்டும். பக்கக்காட்சி திடலில் பாப்கான் மற்றும் விற்பனை பொருட்கள் விற்க அனுமதி மறுக்கப்படுகிறது.

43) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிட்ட அளவில் பானிபூரி அமைத்து விற்பனை செய்ய வேண்டும்.

44) நகராட்சியால் கட்டி கொடுக்கும் கடைகள் அனைத்தும் உரிமம்தாரர்கள் எக்காரணம் கொண்டும் கடையினை கூடுதலாக கட்ட கூடாது.

45) நகராட்சி அனுமதியின்றி விளம்பரம் பேனர்கள், தட்டி, போர்டுகள் வைக்க கூடாது.

46) தபால் அலுவலகம் முன்னால் உள்ள கடைகள் 11–ம், சிற்றுண்டி கடை ஒன்றும், வேலுத்தம்பி திடலில் உள்ள கடைகள் 20–ம், பொதுப்பணித்துறை பக்கம் உள்ள கடைகள் –11–ம் பொருட்காட்சி திடலுக்கு கீழ் பகுதியில் உள்ள நிரந்தரமான 12 ஸ்டால்களும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகளும், பொருட்காட்சி திடலுக்குள் கீழ்பக்கம் உள்ள நிரந்தரமான ஸ்டால்களில் 1 மற்றும் 2 ஸ்டால்கள் நகராட்சி ஸ்டால்களும், 3–வது ஸ்டால் பாப்கான் ஸ்டாலும், மற்றுமுள்ள ஸ்டால்கள் அலுவலக ஸ்டால்களும், வடக்கு பக்கம் பானிபூரியும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கூல்டிரிங்ஸ் கடையும் எம்.எல்.எ. அலுவலகம் மேற்குப் பகுதியில் காட்சி கூடமும், இடைப்பட்ட பகுதியில் இலாகாக்களின் அரங்கமும் அதனை தொடர்ந்து ஐஸ்கிரீம் ஸ்டாலும் அதனை தொடர்ந்து காவலர் அரங்கும், பொருட்காட்சி திடலுக்கு வெளியே செல்லும் பக்கத்தில் ஹோட்டலும் அதனை ஒட்டி தீயணைப்பு துறை வெளிப்புற அலுவலகமும் அதனை ஒட்டி அப்பள பஜ்ஜி கடையும் எஞ்சிய பகுதியில் பக்கக் காட்சியும் இடம் பெறும் அனைத்து கடைகளும் அந்தந்த வருடஙகளில் மாற்றி அமைக்கப்படும்.

47) பொருட்காட்சி திடலுக்குள் ஏலம் விடப்பட்ட குத்தகை இனஙகளுக்கு குத்தகை தொகையில் வருமான வரி 2 % செலுத்தப்பட வேண்டும்.

48) குத்தகை இனஙகளுக்கு உரிய குத்தகை தொகைக்கு மத்திய அரசாணையின்படி சேவைவரி 18% குத்தகை தொகையுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

49) குத்தகை இனம் வரிசை எண்.1–ல் உள்ள குத்தகை உரிமத்தின் குத்தகைத்தாரர் அரசு வாகனஙகள் தவிர வேறு தனியார் வாகனஙகளை உள்ளே அனுமதிக்க கூடாது.

50) குத்தகை இனம் வரிசை எண்.2 பொருட்காட்சி திடலில் நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய வேண்டும்.

51) ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு நான்கு, 12” இன்ஞ்ச் ஸ்பிக்கர் ( Speaker) உள்ள இரண்டு பாக்ஸ் வைக்க வேண்டும்.

52) பொருட்காட்சி நடைபெறும் நாட்களில் விளம்பர போர்டுகளோ, பேனர்களோ வைக்க விரும்பும் நிறுவனங்கள் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் நகராட்சியின் அனுமதி பெற்றும் அதற்கான வரையறுக்கப்பட்ட கட்டணத்தினை நகராட்சியில் செலுத்தி அதற்கேற்ப அமைக்கப்பட வேண்டும்.

53) விளம்பரம் செய்யும் உரிமத்தாரர் பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் கடைகாரர்கள் விநியோகிக்கும் விளம்பர நோட்டீஸ்கள் விளம்பரக் கட்டணம் வசூலிக்க கூடாது.

54) ஒலி ஒளி அமைக்கும் உரிமைதாரர் நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளில் 4 சீரியல் ஆர்ச் 70 அடி உயரத்தில் தங்களின் சொந்த செலவில் அமைக்க வேண்டும். இப்படி கட்டப்பட்ட ஆர்சில் ‘‘குழித்துறை நகராட்சி 93–வது வாவுபலி பொருட்காட்சி’’ என்று எழுதப்பட வேண்டும். ஒலி ஒளி அமைக்கும் உரிமைதாரர் நகராட்சியால் குறிப்பிடும் இடங்களில் மட்டும் ஒலி பெருக்கி வைத்து இயக்கம் செய்ய வேண்டும். குழித்துறை சந்திப்பு, குழித்துறை தபால் நியைம், கழுவன்திட்டை சந்திப்பு, வெட்டுவெந்நி சந்திப்புகளில் அமைக்க வேண்டும்.

55) மேற்கண்ட குத்தகை இனஙகளில் ஏலத்தொகை (அ) ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு மேல் கோர விருப்பமுள்ள குத்தகைத்தாரர் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உயர்ந்த ஏலத்தொகையினை 100% முழுமையாக ரொக்கமாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு முழு தொகையினையும் செலுத்தி தெரிவிக்கும் பட்சத்தில் தஙகளின் மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

56) வளைவு அலஙகார அர்ச் அமைக்க பந்தல்காரர் மட்டுமே ஒப்பந்தபுள்ளியில் அல்லது எலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

57) கடையினுள் மின்சார கட்டணம் வசூலிப்பது நகராட்சி பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்படும். ஓலி, ஒளி குத்தகைதாரர் நகராட்சி அனுமதியின்றி பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு மின்விளக்கு போன்ற சாதனஙகள் அமைக்க கூடாது.

58) பொருட்காட்சியில் பக்ககாட்சி நடைபெறும் பகுதிக்குள் 500 அடிக்குள் ஏற்கனவே உள்ள நிரந்தர கடைகள் தவிர புதியதாக ஐஸ்கீரீம் கடை பாப்கான்கடை, பானிபூரி, அப்பளம் பஜ்ஜிகடை, உணவு விடுதி போன்றவை நடத்துவதற்கு அனுமதி கிடையாது மீறுவோர்மீது காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

59) குழித்துறை நகராட்சியால் இதற்கு முன்னர் நடைற்ற வாவுபலி பொருட்காட்சியில் கடைகள் மற்றும் ஏனைய இனஙகள் குத்தகைக்கு எடுக்கப்பட்டு குத்தகை தொகை செலுத்தாமலும் கடைகளை திறக்காமலும் நகராட்சிக்கு நிதியிழப்பும் மற்றும் அவமானம் ஏற்படுத்திய

குத்தகைதாரர்கள் மற்றும் நகராட்சியினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையாக உள்ளவர்கள் வரும் வாவுபலி பொருட்காட்சிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

60) 93–வது வாவுபலி பொருட்காட்சியில் கடைகள் எடுக்கப்படும் குத்தகைதாரர்கள் துவக்கவிழா தொடங்கி 2–வது தினத்திலேயே கடைகள் அமைக்கப்படவேண்டும். அவ்வாறு கடைகளை குத்தகைக்கு எடுத்து இரண்டு நாட்களில் கடைகளை அமைக்காத பட்சத்தில் அதிகமான குத்தகை தொகைக்கு எடுத்த 2–வது நபருக்கு கடைகளை அமைப்பதற்கு நகராட்சி ஆணையாளரால் அனுமதி வழஙகப்படும். 2–வது நபருக்கு அனுமதி வழஙகும் பட்சத்தில் ஒன்றாவது நபரால் கோரப்பட்ட குத்தகை தொகைக்கும் 2–வது நபரால் கோரப்பட்ட குத்தகை தொகைக்கும் உள்ள வித்தியாச தொகையினை ஒன்றாவது நபரின் வைப்புத் தொகையில் ஈடு செய்யப்படும். நிலுவைத் தொகைக்காக முதல் நபரின் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

61) 93–வது வாவுபலி பொருட்காட்சியில் பக்ககாட்சி எடுக்கும் குத்தகைதாரர் நகராட்சி அலுவலர்கள், மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு பக்ககாட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்து இனஙகளுக்கும் ஒருகுடும்பத்திற்கு (7 நபர்கள்) அவர்கள் விரும்பும் தேதியில் ஒவ்வொன்றும் ஒருமுறை கட்டாயம் பார்வையிடவும், பயன்படுத்திடவும் அனுமதிக்க வேண்டும். பொருட்காட்சி துவஙகும் நாளன்றே பாஸ் வழஙகப்படவேண்டும்.

62) மத்திய, மாநில அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் ஆணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஒப்பந்தகாரர் மற்றும் குத்தகைதாரர்களுக்கு பொருந்தும்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் கூடிய உபவிதிகள் தமிழ்நாடு நகராட்சி சட்ட பிரிவு 306–ன் படி தயார் செய்யப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு நடை முறைப்படுத்தப்படுகிறது.
ந.க.எண்.1001/2018/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண்.3097**

**93–வது வாவுபலி பொருட்காட்சி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு குத்தகை எடுக்கும் இனங்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வழங்க வேண்டி இருந்தாலும் மற்றும் நிலுவை தொகை வழங்க வேண்டி இருந்தாலும் வாவுபலி முடிவு பெற்ற தேதியிலிருந்து ஒரு வாரம் கழித்து உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட்ட உடன் அவர்களது தொகை திருப்பி வழங்கப்படும். அனைத்து நிபந்தனைகளும் (1 முதல் 62 ) ஒப்புக் கொள்ளப்பட்டது.**

<u>பொருள் எண். 18</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களின் மின் அஞ்சல் படிவம் நாள் 2–4–2018–ன்படி Ocki Cyclone 2017 (Temporary restoration of Road work) நிதியின் கீழ் ரூ.1.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் உண்டனாகுழி குளம், பெருங்குளம் சாலையில் தார் சாலை ஒட்டுபணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.2,00,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி

பணிக்கு திட்ட நிதி ரூ.1.25 இலட்சம் போக மீதம் தொகை ரூ.75,000/—ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3098**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/—
எம். கணபதி சங்கர்,
ஆணையர்(கூ.பொ.) மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(கூ.பொ.),
குழித்துறை நகராட்சி.